**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C.No.56/2020**

2024 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.கவின்குமார் (அ.சா.4) | தொழில் | : கல்லூரி மாணவர் |
| த/பெ., க/பெ. | : திரு. கிருஷ்ணசாமி | வயது | : 23 |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 18.10.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

எனக்கு சொந்த ஊர் பழைய ஆயக்குடி. கோவை இந்துஸ்தான் கல்லூரியில் எம்.பி.ஏ., படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 கிருஷ்ணசாமி என் தகப்பனார், அ.சா.2 தேவி என் தாயார், அ.சா.3 லட்சுமி என் பாட்டி. பழனி அடிவாரம் குறும்பர் மடத்தை எனது தந்தை குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். 04.04.2018ம் தேதியன்று மடத்தில் இ.பி. சர்வீஸ் செய்வதற்காக மடத்திற்கு வந்தார்கள். போஸ்ட் கம்பத்தின் அருகில் தகரம் இருந்தது, அதை எடுக்கச்சொல்லி 2ம்

எதிரியின் தாயாரிடம் நானும் என் பாட்டியும் சொன்னோம். எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். குட்டியிடம் அவரது அம்மா சொன்னதன்பேரில் குட்டியும், அவரது அண்ணனும், தம்பியும் தகாத வார்த்தைகளால் எங்களை பேசினார்கள். என் தாயாரிடம் நான் அந்த விபரத்தை சொன்னபிறகு என் தாயாரும் சென்று 2ம் எதிரியிடம் விசாரித்தார். 2ம் எதிரி என் தாயாரை கையால் அடித்துவிட்டார். அதன்பின்பு நாங்கள் வீட்டுக்கு சென்றுவிட்டு, எங்கள் அப்பாவிற்கு தகவல் சொன்னோம். பொது மடத்தின் உறுப்பினர்களுக்கு தகவல் சொன்னோம். அதன்பின்பு என் அப்பா 2.00 மணி வாக்கில் வந்தார். என் தகப்பனார் வந்த பிறகு சத்தமாக இருந்ததால் நாங்கள் சென்று பார்த்தோம். எதிரிகள் இருவரும் என் தகப்பனாரை கத்தியால் இடதுபுறம் முதுகில் குத்திவிட்டனர். என் அப்பாவை பழனி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றுவிட்டனர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை :– இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.10.18 18:56:40 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.